நாள் 31.03.2023.
அ வ எண் 60/2021
வா சா 1 ஆவுடையப்பன், த/பெ நம்பி
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால், ஒரு அயிட்டம்தான் சொல்லப்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், சர்வேஎண் 714அரசு புறம்போக்கு இடம் ஆகும். சாவே எண் 714 சொத்தை மட்டும்தான் வழக்கில சொல்லியுள்ளேனா வேற சர்வே எண் பற்றி வழக்கில ' சொல்லியுள்ளேனா என்றால், ஒரு சர்வே எண் மட்டும்தான் சொல்லியுள்ளேன். 1வது அயிட்ட சொத்தாக சர்வே எண் 713/3ஏ சொத்து சொல்லப்பட்டுள்ளது அது யாருடைய சொத்து என்றால் என்னுடைய சொத்து. சர்வே எண் 714 இடமானது அரசு புறம்போக்கு என ஆவணங்களின் அடிப்படையில்தான் அதனைநான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சர்வே எண் 714ன் ஆவணங்களை பார்த்துதான் நான் வழக்கு தாக்கல ' செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் சர்வே எண் 714க்குரிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சர்வே எண் 714 ஆவணங்களை பார்வையிட்ட ஆவணங்கள் எனது கைவசம் உள்ளதா என்றால், ஆம் அரசு புறம்போக்கு என நான் தெரிந்துகொண்டேன். என்ன காரணத்திற்கான நான் பார்த்த அரசு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் காரணம் சொல்ல தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் 1ம் தபசில சொத்திற்குரிய ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான். 1 தபசில் ' சொத்தை பொறுத்து எந்த பரிகாரமும் நீதிமன்றத்தில் நான் கேட்கவில்லை என்றுசொன்னால் வழியை அடைக்க முயற்சிசெய்தார்கள் அதனால் நான் வழக்கு போட்டுள்ளேன். சர்வே எண் 713 என்னுடைய பூர்வீக சொத்தா அல்லது நான ' கிரையம ' பெற்ற சொத்தா என்றால், வள்ளிநாயகத்திடம் இருந்து நான் கிரையம ' பெற்ற சொத்தாகும். வள்ளிநாயகத்திடம் கிரையம்பெறும்போது எத்தனை சென்ட் இடம் நான் கிரையம் பெற்றேன் என்றுசொன்னால் 24 சென்ட் கிரையம்பெற்றேன். அதன் பிறகு அவரது மனைவியிடம இருந்து 6 சென்ட் இடம்

கிரையம் வாங்கினேன். அது வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் கிரையம் பெறப்பட்டது என்றுசொன்னால் சரிதான். நான் முதலில் வாங்கிய 24 சென்டிற்கு எந்த பக்கத்தில் 6 சென்ட் இடம் உள்ளது என்றால் அது எந்த பக்கம் உள்ளது என்று தெரியாது மொத்தம் 30 சென்ட் கிரையம் பெற்றிருக்கிறேன். வருவாய்த்துறையில் 6 சென்ட் விடுபட்டுள்ளதாக சொன்னார்கள் நான் மொத்த் 30 செண்டில் அதன் பிறகு விடுபட்ட 6 சென்ட் கிரையம் வாங்கினேன். ஆனால் வா.சா.ஆ.2 ஆவணத்தில் அவ்வாறு விடுபட்டுவிட்டதாக எந்த வாசகமும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில வள்ளிநாயகம் அவருடைய கைவசம் இடம் உள்ளதாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். 1ம் தபசில் சொத்து சர்வே எண் 713/3ஏ-க்கு கீழ்புறம் எனக்கு பாத்தியப்பட்ட இடம்தான் உள்ளது என்றால சரிதான். அது எந்த சர்வே எண் என்று தெரியுமா என்றால், தெரியும் சர்வே எண் 713/3பி ஆகும். சர்வே எண் 713/3பி-க்கான கிரைய ஆவணமோ அல்லது பட்டாவோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 713/3பி-க்கு கீழ்புறம் பச்சையாறுக்கு செல்லும் ரோடு உள்ளது என்று சொன்னால் சரிதான் ஆனால் அந்த ரோட்டில் வாகனங்கள் எதுவும் செல்ல முடியாது ஆட்கள் மட்டும்தான் நடந்து செல்ல முடியும் அது சுடுகாட்டுக்கு செல்லும் பாதை என்று சொன்னால் சரிதான். அந்த ரோட்டில் வண்டி வாகனங்கள் செல்லும் என்றும் நான் வழக்கிற்காக செல்லாது என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. கோவிலுக்கு வடபக்கம் ஆறுமுகத்தேவர் மகன் முருகனுக்கு பாத்தியப்பட்ட வயல் உள்ளது என்றால் சரிதான். மேலபக்கமும் ஆறுமுகத்தேவரின் மகனுக்கு பாத்தியப்பட்ட வயல் உள்ளது என்று சொன்னால் இல்லை. அது பெருமாள் கோவில் இடம் ஆகும். அதை குப்பான்கோனாரின் மக்கள் வைத்திருக்கிறார்கள். கோவிலுக்கு வடபுறம் எனக்கும் ஆறுமுகத்தேவரின் மகனுக்கும்தான் இடம உள்ளது என்றும் ஊர் மக்களோ அல்லது வேறு எந்த நபரோ அங்க செல்லவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நிறைய நபர்கள் அந்த பாதையை பயன்படுத்தி ஆற்றுக்கும் சுடுகாட்டுக்கும் சென்று வருகிறார்கள். வா.சா.அ.1 ஆவணத்தில் வள்ளிநாயகக்கோனாருக்கு தாவா சொத்து கிரைய ஆவணம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வள்ளிநாயகக்கோனார் தாவா சொத்தை எனக்கு கிரையம தரும்போது முன் ஆவணங்கள் அனைத்தையும என்னிடம்

ஒப்படைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. ஒப்படைக்கவில்லை. நான் சொல்லுவது தவறு என்றும் வள்ளிநாயகக்கோனார் முன் ஆவணங்கள் அனைத்தையும் என்னிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும் நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வள்ளிநாயககோனார் வாங்கிய கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்தால் மேல்பக்கம் கோவில் உள்ள விவரம் தெரிந்துவிடும் என்பதால்தான் அதனை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வருவாய் ஆவணத்தை பார்வையிட்டபோது புல எண் 714ல் குலசேகரநங்கையம்மன் திருக்கோவில் இருப்பதாகதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை அரசு புறம்போக்கு என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது அரசு புறம்போக்கு இடத்தில்கோவில் இருக்கிறது. குலசேகரநங்கையம்மன் திருக்கோவில் எத்தனை சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் 5 சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது. திருக்கோவில் நிர்வாகத்தை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான் பிரதிவாதிகள் மூன்று பேரும் என்னுடைய வழியை அடைக்க முயற்சித்ததால்தான் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் 3 பேரும் என்னுடைய வழியை அடைக்க முயற்சி செய்ததற்கு நான் காவல்நிலையத்திலோ வருவாய்த்துறையிலோ புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் அதனால்தான் நான் எந்த புகாரும் கொடுக்கவிலலை என்றுசொன்னாலும் சரியல்ல. வழக்கிற்காக அவ்வாறு சம்பவம் நடந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால சரியல்ல. 1 முதல 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் பார்த்திருக்கிறேன். நான் 1ம் பரிகாரம் விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ள நிலையில் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கிற்கு முன்பாகவே திருக்கோவில் நிர்வாகம் பேச்சிக்கோனார் என்பவர் நிர்வாகம் செய்து வந்தவர்களில் ஒருவர் ஆவார் என்றால் சரிதான். பேச்சிக்கோனார் சர்வே எண் 714யை அளக்க தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் மனு கொடுத்தன் பேரில் எனக்கும் முருகனுக்கும் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து அறிவிப்பு அனுப்பபபட்டது என்று சொன்னால் இல்லை. மனுவின் அடிப்படையில் இடத்தை அளந்துவிடுவார்கள் என்ற காரண்ததினால் பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காத

தோசத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்ற சொன்னால் சரியல்ல. அது போன்று திருக்கோவிலை சுற்றி 4ம் பிரதிவாதி அலுவலகத்தால் பொதுமக்கள் வரி பணத்தில் தார் சாலை அமைக்கப்பட்டது சங்கதிகள் சம்பந்தமாக எந்தவிதமான ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கலசெய்யவில்லை என்றால் சரியல்ல. ஆனால் அது பேரூராட்சியால் போடப்பட்டது. பொது நிதியில் இருந்து ரோடு போட்டுள்ளதாக எனக்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் ரோட்டை சுடுகாடு வரை போட்டுள்ளதாக தந்துள்ளார்கள். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல' செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல தாக்கல' செய்துள்ளேன். வா.சா.ஆ.6 ஆவணத்துடன் நான் தகவல அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்த மனுவின் நகல் இணைக்கப்படவிலலை என்று சொன்னால் சரிதான். அதே போன்று வா.சா.ஆ.6 ஆவணத்தில' சர்வே எண் 714ல் தார் சாலை அமைத்துள்ளதாக புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் ஆனால் சர்வே எண் 714ல் தான் தார் சாலை உள்ளது. சர்வே எண் 714 அரசு புறம்போக்கு என்பதற்கும் பொது பாதை என்பதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அது அரசு புறம்போக்குதான். குலசேகரநங்கையம்மன் கோவில் எனக்கு தெரிந்து 50, 60 ஆண்டுகளுக்கு மேலாக அந்த இடத்தில் இருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்து குலசேகரநங்கையம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்ற நிலையில் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால' சரியல்ல. எனது வயலுக்கு விவசாய பொருட்கள் கொண்டு செல்ல வயலுக்கு கீழ்புறம் சாலை உள்ளது என்றும' அதனை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. அதில் டிராக்டரோ அறுவடை இயந்திரமோ கொண்டு செல்ல முடியாது. நான' தாக்கல' செய்துள்ள ஆவணங்களுக்கும' நான் கோரியுள்ள பரிகாரத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக கு வி தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.